*சிலாங்கூர் ஒன் வோர்ல்ட் தங்கும் விடுதியில் நடைப்பெறும் 2013-ஆம் ஆண்டு ஜசெக சிறப்பு பேரவையில் ஜனநாயக செயல் கட்சியின் பொதுச்செயலாளர் லிம் குவான் எங் அவர்களின் உரை.*

**மலேசிய கனவு - மக்கள் ஜனநாயகம்; சிறப்பான நிர்வாகம்; ஒற்றுமை, நேர்மை மற்றும் திறமையுள்ள மக்களை எதிர்காலத்தில் உருவாக்குவதில் முக்கியத்துவம் கொடுத்தல்.**

அனைவருக்கும் வணக்கம்.
ஒரே நோக்கத்துடன் இந்த காலை நேரத்தில் ஒன்றுக் கூடியிருக்கும் அனைத்து கட்சி பேராளர்களையும் வருக வருக என வரவேற்கின்றேன். தீய எண்ணம் மற்றும் அநீதியுடன், தன்னிச்சையாக சங்கப் பதிவிலாகா ஜ.செ.க மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களை முறியடிக்கவும் கட்சியின் பதிவு இரத்து செய்யப்படாமல் இருப்பதற்கும் நாம் இங்கு இன்று ஒன்று கூடியுள்ளோம்.

நமது சொந்த வெற்றியே, நம்மை நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்கின்றது. நாம் கடந்த 13-வது பொதுத் தேர்தலில் பெற்ற மாபெரும் வெற்றியை ஜிரணித்துக் கொள்ள முடியாதவர்களின் தாக்குதலுக்கு நம் கட்சி உள்ளாகியுள்ளது. கடந்த 47 ஆண்டு கால வரலாற்றில் இதுபோன்ற ஒரு மாபெரும் வெற்றியை நாம் பெற்றதில்லை. கெடா முதல் சபா வரை நாம் வெற்றி பெற்றுள்ளோம். 38 நாடாளுமன்றம் மற்றும் 107 சட்டமன்ற தொகுதிகளில் நாம் வெற்றிப் பெற்றுள்ளோம். அதுமட்டுமில்லாமல், மலேசியாவில் இரண்டாவது மிகப் பெரிய கட்சியாக நாம் வளர்ந்துள்ளோம்.

சிலாங்கூர் மற்றும் பினாங்கு மாநிலங்களில் நாம் மாநில அரசாங்கங்களில் நாம் அங்கம் வகிக்கின்றோம். அனைத்து இனம் மற்றும் மதத்தை சார்ந்தவர்கள் நமது கட்சியின் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர்; இங்கு சில மலாய் சமூகத்தை சார்ந்த மக்கள் பிரதிநிதிகளின் பெயர்களை குறிப்பிட விரும்புகின்றேன்; புக்கிட் பெண்டேரா நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் ஜைரீல் கீர் ஜோகாரி, ராவூப் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ முகமட் அரிப் சப்ரீ, மெந்தாகாப் சட்டமன்ற உறுப்பினர் தெங்கு சூல்பூரி ஷா பின் ராஜா புஜி மற்றும் கடசான் இனத்திலிருந்து முதல் சட்டமன்ற உறுப்பினராக சகோதரர் டாக்டர் எட்வீன் போசி.

புதியதொர் மாற்றத்திற்காக நம்முடைய பிரதிநிதிகளில் பலர் இளைஞர்கள்; நாட்டில் மிக இளைய சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் ஜொகூர் ஜெயா சட்டமன்ற உறுப்பினர் சகோதரி லியாவ் சாய் துங். இத்தடவை நம்முடைய கட்சியை பிரதிநிதித்து 25 பெண்கள் மக்கள் பிரதிநிதிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்; பத்து காவான் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி கஸ்தூரி பட்டு முதல் இந்திய பெண் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள வேளையில் மேலும் இரு இந்திய பெண்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்; அவர்கள் சபாய் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி காமாட்சி துரைராஜு மற்றும் ராஹாங் சட்டமன்ற உறுப்பினர் சகோதரி மேரி ஜோசப்பின் பிரித்தாம் சிங்.

தேர்தலில் தோல்வியுற்ற நம்முடைய வேட்பாளர்களும் இன்று இந்த நாடே திரும்பிப்பார்க்கும் வண்ணம் வளர்ந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஹிம்புனான் ஹீஜாவ் எனப்படும் பசுமைப் பேரவையின் தலைவர் சகோதரர் வோங் தாக். லைனாஸ் தொழிற்சாலையை மூட வேண்டும் என்ற கோரிக்கைக்காக 1 மில்லியன் கையெழுத்துகளை அவர் பெற்றுவிட்டார். கடந்த பொதுத்தேர்தலில் பெந்தோங் நாடாளுமன்ற தொகுதியில் மிகக்குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தாலும், அடுத்த பொதுத்தேர்தலில் கண்டிப்பாக இவர் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இவ்வேளையில், நோய்வாய்பட்டிருக்கும் முன்னால் சரவாக் மாநில தலைவர் சகோதரர் வொங் ஹோ லொங் நமது கட்சிக்கு ஆற்றியுள்ள மகத்தான சேவையை மதித்து நினைவுக் கொள்கிறேன்; மேலும் அவர் உடல் நலம் தேரி வர நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிராத்திப்போம்.

கடந்த பொதுத் தேர்தலில் நாம் பெற்ற மிக பெரிய வெற்றி தேசிய முன்னணிக்கு மிக பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது. தேசிய முன்னணி மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்றது. ஜ.செ.க-விற்கு மக்கள் கொடுக்கும் ஆதரவை தடுக்க முடியாது என்பதை உணர்ந்துள்ள தேசிய முன்னணி, சங்கங்களின் பதிவிலாகாவை தவறாக பயன்படுத்தி ஜனநாயக செயல் கட்சியை ஒழித்துக்கட்ட முடிவு செய்துள்ளது.

ஜனநாயக செயல் கட்சி உண்மை மற்றும் நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. கடந்த டிசம்பர் மாதத்தில் நடைப்பெற்ற மத்திய செயலவை உறுப்பினர்கள் தேர்வின் போது ஏற்பட்ட தவறை மூடி மறைக்காமல் பொதுவில் அந்த தவறை ஒப்புக்கொண்டு சரியும் செய்யப்பட்டுவிட்டது. அந்த இறுதி முடிவை ஒரு சர்வதேச கணக்கியல் நிறுவனம் மறு உறுதியும் செய்து விட்டார்கள்.

அந்த சரி செய்யப்பட்ட தவற்றை மேற்கோள்காட்டி சங்கங்களின் பதிவிலாகா, தேர்வு செய்யப்பட்ட புதிய மத்திய செயலவை உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தேர்தல் நடத்துவதற்கு உத்தரவிட்டது. நான் சங்கங்களின் பதிவிலாகா இயக்குனரை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு, ஏன் மறுத்தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்கான காரணத்தையும் கூற மறுத்துவிட்டனர். நீதி மறுக்கப்பட்ட சூழ்நிலையில், நீதிமன்றத்தை நாடாமல், அந்த அநீதியான கட்டளையையும் கட்சி தலைமைத்துவம் ஏற்றுக்கொண்டது.

சங்கங்களின் பதிவிலாகா, நமது கட்சியின் பதிவை இரத்து செய்யும் கடுமையான நடவடிக்கை எடுப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நாள் கூட நமது கட்சி தடைசெய்யப்படும் கசப்பான முடிவை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, மிகச்சிறந்த முடிவை எடுத்த 2008-2012 மத்திய செயலவை உறுப்பினர்களுக்கு இவ்வேளையில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமில்லாமல், கட்சியின் இக்காட்டான சூழ்நிலையை புரிந்துக் கொண்டு இன்று வரை கட்சிக்காக முழு விசுவாசத்துடன் இருக்கும் அனைத்து பேராளர்கள் மற்றும்

கட்சி உறுப்பினர்களுக்கும் இவ்வேளையில் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு கட்சி பேரவை மூலம் மறுத்தேர்தல் நடத்துவதற்கு கட்சி தலைமைத்துவம் எடுத்த முடிவை சில துரோகிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால், இந்த சிறப்பு கட்சி பேரவையைத் தடுத்து நிறுத்துவதற்கு நீதிமன்ற உத்தரவை பெருவதற்கு கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். ஆனால், நீதிமன்ற வழக்கில் நாம் வெற்றிப் பெற்றோம். அதோடு, சங்கங்களின் பதிவிலாகா கூறுவதைப்போல, பத்து வாரங்களுக்கு முன்பு பேரவை அறிக்கையை அனுப்ப வேண்டும் என்பதும் தவறு என்று நீதிமன்றத்தில் நாம் நிருபித்துள்ளோம். இவ்வேளையில் கட்சி தலைவர் சகோதரர் கர்பால் சிங் மற்றும் கட்சியின் சட்டப் பிரிவுத் தலைவர் சகோதரர் கோபிண்ட் சிங் அவர்களுக்கும் நன்றி.

இருந்தும் அவர்களின் பொய்கள் தொடர்கின்றன. தொடர்ந்தும், 753 பேராளர்களுக்கு, பினாங்கில் நடந்த, கடந்த பேரவையின் அறிக்கை அனுப்பப்படவில்லை என்று சங்கங்களின் பதிவிலாக கூறுகின்றது. அந்த பொய்களை பிரசுரித்ததற்காக, உத்துசான் நாளிதழின் மேல், ஜசெக நாடாளுமன்ற தலைவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். சிறிதும் வெட்கமேயில்லாமல், கடந்த காலங்களைப் போல, பொய்யுரைத்ததற்காக உத்துசான் ஜசெகவிடமும், அவரிடமும் மன்னிப்புக்கோரி அப்பொய்யை மீட்டுக்கொள்ளும்.

தேசிய முன்னணி, ஜனநாயக செயல் கட்சியை ஒழித்து விட வேண்டும் என்று மேற்கொள்ளும் அனைத்து திட்டங்களையும் ஜனநாயக செயல் கட்சி தடுத்து நிறுத்தும். நம்முடைய கட்சி வரலாற்றில் இந்த சம்பவம் மிக பெரிய கருப்பு சம்பவமாகும். கட்சியின் பதிவு இரத்து செய்யப்படலாம் என்ற பயங்கரமான சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். அப்படிப்பட்ட விரும்பத்தகாத சம்பவம் எதுவும் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த மறுத்தேர்தலை நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கு பிறகு இந்த பிரச்சனைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்தவுடன் நாம் கண்டிப்பாக மேலும் வலுப்பெறுவோம். மக்களுக்காகவும், அவர்களின் எதிர்பார்ப்புக்காகவும் நாம் போராட வேண்டும். இளைய சமூகத்தினருக்கு ஒரு மிக சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி தர வேண்டும். மலேசிய மக்கள் மாற்றத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். 51% வாக்குகளுடன் நாம் கடந்த 13-வது பொதுத் தேர்தலில் வெற்றிப் பெற்றுவிட்டோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. டத்தோஸ்ரீ அன்வார்தான் புதிய பிரதமர். தேசிய முன்னணி வெற்றிப்பெற்ற 133 நாடாளுமன்றங்களில் 82 நாடாளுமன்றம் 55% வாக்குகளில் மட்டும்தான் வெற்றிப் பெற்றுள்ளார்கள். ஆனால், மக்கள் கூட்டணி வெற்றிப் பெற்ற 89 நாடாளுமன்றங்களில் 60 நாடாளுமன்றத்தில் 60% மேல் வாக்குகள் பெற்று வெற்றிப் பெற்றுள்ளோம்.

ஆகவே, மக்கள் கூட்டணியை விட தேசிய முன்னணிக்கு மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்ற நாடாளுமன்ற தொகுதிகள் இன்னும் அதிகமாக

உள்ளது. தேர்தல் சீர்திருத்தம், தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டு 14-வது பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டும்.

ஜனநாயக செயல் கட்சி மக்களுக்காக மலேசிய கனவு எனும் திட்டத்தை முன்வைக்கின்ற காரணத்தால் தேசிய முன்னணி ஜனநாயக செயல் கட்சியை கண்டு பயப்படுகின்றது. தேசிய முன்னணி, பொதுத்தேர்தலில் அவர்கள் அடைந்த தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கின்றனர். மக்களை மதம் இனம் அடிப்படையில் பிரிக்காமல் அவர்களிடையே சகிப்புத்தண்மை மற்றும் ஒற்றுமை உணர்வுள்ள ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும். மக்கள் கூட்டணி வெறுப்பு, பலாத்காரம், அச்சுறுத்தல், இலஞ்சம் மற்றும் பண அரசியல் போன்றவைகளுக்கு எதிரானது.

ஜனநாயக செயல் கட்சி மேற்கொண்டிருக்கும் பல இன அரசியல் அனைவருக்கும் சம வாய்ப்பு கொடுக்கும். இதன் மூலம் இன அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும் மற்றும் இந்த நாட்டின் வளத்தை அனைத்து இன மக்களும் அனுபவிக்க முடியும்.

தேசிய முன்னணி அம்னோவின் 4M மாதிரியை மட்டும்தான் நம்பி கொண்டிருக்கிறது. அவை ஊடகம், அரசாங்க இலாகாக்கள் அல்லது நிறுவனங்கள், பணம் மற்றும் மகாதிரின் அரசியல் பாவனை. தேசிய முன்னணி அவர்கள் செய்யும் இலஞ்சம், சுற்றத்தை வளப்படுத்தும் நடவடிக்கை மற்றும் அதிகார தவறுபயோகம் போன்வற்றை பல பொய்கள் சொல்லி மூடிவிடுவார்கள். உங்களை வாங்க முடியவில்லை என்றால் மிரட்டுவார்கள். அதுவும் எடுபடவில்லை என்றால் வெறுப்புதன்மையை உண்டாக்குவார்கள்.

மக்கள் இன்னும் முட்டாள்கள் இல்லை. கடந்த 13 வது பொதுத் தேர்தலில் பல வகைகளில் இனவாதத்தை தூண்டிவிட்டும் மொத்தத்தில் அம்னோ 1.2% மலாய்காரர்களின் ஆதரவை மட்டுமே அவர்களால் அதிகரிக்க முடிந்தது. உண்மையில் 4 மாநிலங்களில் அம்னோவிற்கான மலாய்காரர்கள் ஆதரவு சரிவு கண்டுள்ளது. அவை திரெங்கானு மற்றும் பெர்லிஸ் மாநிலத்தில் 3% சரிவு, பகாங் மற்றும் பினாங்கு மாநிலத்தில் 1% சரிவு.

பினாங்கு மாநில ஜ.செ.க அரசாங்கம் மலாய்காரர்களை ஒதுக்கிவிட்டார்கள் என்று பல பொய் பிரச்சாரங்கள் இந்த அம்னோவால் செய்யப்பட்டும், அந்த மாநிலத்தில் அம்னோவிற்கான மலாய்காரர்கள் ஆதரவு சரிவுக் கண்டுள்ளது என்பதுதான் மிகவும் கவனத்தை ஈர்த்துள்ளது. சிறப்பான நிர்வாகம் செய்தால் மலாய்காரர்களின் ஆதரவு அதிகரிக்கும் என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

தற்போது அம்னோ வெறும் காகித புலியாகிவிட்டது, மலாய்காரர்கள் உத்துசான் நாளிதழ் பொய் நிறைந்த நாளிதழ் என்று உணர்ந்து விட்டனர். அம்னோவின் 4M மாதிரியின் ஆயுள் நிறைவுப்பெறப்போகிறது. அம்னோவால் புதிய கருத்துகளை இதன்

பிறகு முன் வைக்க முடியாது. புதிய தலைவர்களும் கிடையாது. மாறாக இனம், மதம் மற்றும் அரசர்களை வைத்துக் கொண்டு மட்டும் அரசியல் நடத்தப் போகிறார்கள்.

புதிய சிந்தனைகள் மற்றும் திட்டங்கள் இல்லாத காரணத்தால் அம்னோ கடுமையான சட்டங்களுக்கு புத்துயிர் உண்டாக்கும் மற்றும் பூமிபுத்ராக்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டத்தை மறுசுழற்சி செய்து வருகின்றது. அப்படி இல்லையென்றால் ஏன் இன்றுவரை அம்னோ பூமிபுத்ராக்களின் 52 பில்லியன் ரிங்கிட் பங்குகளின் நிலமையை பற்றிய உண்மையை சொல்ல மறுக்கின்றது?

இந்த காரணங்களால்தான் நாம் இன்று இங்கு இருக்கின்றோம். புதிய தலைமைத்துவத்தை தேர்வு செய்வது மட்டுமின்றி கட்சியையும் காப்பாற்ற வேண்டும். கடந்த மே 5 தேதிக்கு பிறகு நடக்கும் கட்சியின் முதல் ஒன்றுக் கூடுதலாக விளங்கும் இந்நிகழ்வில் கட்சியின் எதிர்காலத்தையும் திட்டமிடப்போகின்றோம்.

நாம், ஜனநாயக செயல் கட்சி மற்றும் மக்கள் கூட்டணி, சிறப்பான, கொள்கையுள்ள மாற்று தலைமைத்துவத்தை அடையாளம் காண வேண்டும். சிறந்த தலைமைத்துவம், தெளிவான கொள்கை, புதுமை, தூரநோக்குப்பார்வை போன்ற கூறுகளுடன் இருக்க வேண்டும். ஜனநாயக செயல் கட்சி அனைத்து மலேசியர்களையும் மலேசிய கனவு- மக்கள் ஜனநாயகம்; சிறப்பான நிர்வாகம்; ஒற்றுமை, நேர்மை மற்றும் திறமையுள்ள மக்களை எதிர்காலத்தில் உருவாக்குவதில் முக்கியத்துவம் கொடுத்தல் திட்டத்தில் அங்கம் வகிக்கும் படி கேட்டுக் கொள்கன்றிது

முதலாவதாக, அனைத்து மலேசியர்களும் வறுமையிலிருந்து விடுபட வேண்டும், இலஞ்ச செயல்களிலிருந்து விடுப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அறியாமையிலிருந்து விடுப்பட்டிருக்க வேண்டும். சுதந்திரம் மற்றும் மரியாதை நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும். ஒற்றுமையான மலேசிய இனத்தை உருவாக்க வேண்டும், நாம் அனைவரும் மலேசியர்கள் எனும் உறவை உண்டாக்க வேண்டும். நாம் எந்த பின்னனியிலிருந்து வந்திருந்தாலும் நாம் மலேசியர்கள் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் எந்த பிரச்சனை வந்தாலும் அதனை சுலபமாக சமாளிக்க முடியும்.

இரண்டாவது, அரசியல் ஜனநாயகம்,

- தூய்மையான மற்றும் நீதியான தேர்தல்,
- மத்திய அரசாங்க அதிகாரத்தை மாநில அரசாங்கத்துடன் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் மற்றும் ஊராட்சி மன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
- மனித உரிமையை நிலைநாட்ட சட்டத்திட்டங்களை நிலைநாட்ட வேண்டும், மற்றும்
- தகவல் மற்றும் ஊடக சுதந்திரம்.

மூன்றாவது, பொருளாதார ஜனநாயக மூலம் இலஞ்சத்தை ஒழித்து செயல்திறன் இல்லாமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளை சரி செய்து சிறந்த பொருளாதாரத்தை

உருவாக்குதல். பொருளாதார உயர்வுக்கு பொது நம்பிக்கை மிக முக்கியம். கீழ்கண்ட கூற்றுகளால் மட்டுமே அந்த நம்பிக்கையை உருவாக்க முடியும்:

- தலைவர்களின் சொத்தை வெளிப்படையாக அறிவித்தல்.
- வெளிப்படையான குத்தகைகள் முறை.
- திட்டமிடப்பட்ட உதவித் திட்டங்களின் மூலம் சமூக மற்றும் வருமான இடைவெளியை குறைத்தல்.
- சிறந்த மனிதவளத்தை உருவாக்குவதற்கு தரமுள்ள பள்ளி மற்றும் உயர்நிலைக்கல்வி நிலையங்களை உருவாக்குதல்.
- கரையோர வணிக முறையை ஒழித்து மலேசிய முழுவதும் ஒரே விலையை அமல்படுத்துதல் மற்றும் எண்ணேய் ரோயல்டியை 5% இருந்து 20% வரை அதிகரிக்க வேண்டும்.
- மக்கள் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் திட்டங்களை தடுக்க வேண்டும்.

நான்காவது, மலேசிய அரசாங்கத்தின் கடன் தீர்க்கப்பட வேண்டும். 2012-ம் ஆண்டு இறுதியில் வேலை செய்பவர்களில் 79%-ருக்கு ரிம 3000-க்கும் கீழ் சம்பளம் வழங்கப்பட்டது மற்றும் 91%-ருக்கு ரிம 5000-க்கும் கீழ் சம்பளம் வழங்கப்பட்டது. 1997-க்கு பிறகு ஏற்றுமதி தொடர்புடைய தொழித்துறையின் உண்மை சம்பளம் 1.9% ஏற்றம் மற்றும் உள்நாட்டு அடிப்படை தொழிற்துறையில் உணமை சம்பளம் 1.4% ஏற்றம் கண்டது. குறைந்த திறன், குறைந்த உற்பத்தி, குறைந்த சம்பளம் அடிப்படையின் கீழ் மலேசியா நடுத்தர வருமானம் சிக்கல்களில் சிக்கிக்கொண்டுவிட்டது.

ஐந்தாவது, ஜனநாயக செயல் கட்சி பெண்கள் மற்றும் இளையர்களின் தேர்வாக விளங்க வேண்டும். மக்கள் கூட்டணி இளைய தலைமுறையினரின் தேர்வு கட்சியாக இருப்பதால் வெற்றிப் பெற்று விட்டோம். ஆனால், பெண்களின் தேர்வு கட்சியாக இன்னும் வரவில்லை. பெண்களின் ஆதரவு இல்லாமல் மக்கள் கூட்டணி கண்டிப்பாக வெற்றிப் பெற முடியாது. பெண்களின் நலனுக்காக பல திட்டங்கள் நாம் கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

ஆறாவது, நடுநிலையான மலேசியா என்ற கொள்கையை கொண்டிருக்க வேண்டும். அதாவது:

- நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் மலாய் அரசர்களை மதித்தல்.
- மலாய்காரர்கள் மற்றும் பூமிபுத்ராக்களின் சிறப்பு உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டு மற்ற இனத்தவர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும்.
- இஸ்லாம் அதிகாரப்பூர்வ மதம், அதேவேளையில் மற்ற மதங்கள் அமல்படுத்துவதற்கும் சுதந்திரம் உண்டு.
- மலாய் மொழி தேசிய மொழி, அதேவேளையில் ஆங்கிலம் மற்றும் தாய்மொழிகளை பயன்படுத்துவதற்கு சுதந்திரம் உண்டு.
- மலேசிய கூட்டமைப்பில் சம பங்காளிகளாக சபா மற்றும் சரவாக்கை ஏற்றுக்கொள்ளுதல்.

**முடிவுரை**

**மக்களுக்கு நம்பிக்கைக்கு நாம் புத்துயிர் வழங்கும் பட்சத்தில், மலேசியா வளர்ச்சியடைந்த நாடாக மலரும். எவ்வளவு இக்கட்டான சூழ்நிலைக்கு நாம் ஆளான போதும், மக்களின் அறிவாற்றலின் மீதும், திறமையின் மீதும் நாம் நம்பிக்கைக் கொண்டால், நமக்கான தீர்வை நிச்சயம் அவர்கள் நமக்கு ஏற்படுத்தித் தருவார்கள்.**

தனியாரின் முயற்சிகளில் வெளிப்படும் படைப்பாற்றலை, அரசாங்கம் தலையிட்டு, தடை ஏற்படுத்தாமல் இருந்தாலே மலேசியக்கனவு எனும் இலட்சியம் நனவாகும். சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க அதிகபட்சமான நிர்வாக முறையைக் கையாள வேண்டும், ஆனால் அதேவேளையில், படைப்பாற்றல், புத்தாக்கம் ஆகியவற்றில் அரசாங்க தலையீடு மிக குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும்.

ஜசெக, அனைத்து மலேசியர்களுக்குமான கட்சியாக இருக்கவே இலட்சியம் கொண்டுள்ளது. சரவாக்கின் ஈபான், சபாவின் கடாசான் மக்கள் உட்பட அனைத்து மலேசிய இனத்தினருக்கும் நாங்கள் குரல் கொடுப்போம். மசீசவைப் போன்ற, கெராக்கான் போன்ற, குறிப்பாக அம்னோவைப் போன்ற கட்சியாக இருப்பதற்கு எப்பொழுதுமே நமக்கு விருப்பம் கிடையாது. கடந்த பொதுத்தேர்தலில், அக்கட்சிகள் சந்தித்த சரிவானது, மலேசிய அரசியல் வானில், இனவாத அரசியலுக்கு இடமில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**மசீசவை விட மிகச்சிறப்பாக சீனர்களை பிரதிநிதிக்கவும், அம்னோவை விட மிகச்சிறப்பாக மலாய்க்காரர்களுக்கு சேவையாற்றவும், மஇகாவைவிட மிகச்சிறப்பாக இந்தியர்களின் நலன் காப்பதிலும் மக்க்ள் கூட்டணி சிறந்தது என்பதை பினாங்கிலும், சிலாங்கூரிலும் நாம் நிருபித்துள்ளோம். தேசிய முன்னணியை விட, அனைத்து மலேசியர்களுக்கும் மிகச்சிறப்பான சேவையை, ஜசெக உறுப்பினர்களான நம்மால் வழங்க முடியும் என்பதை ஒன்றிணைந்து நாம் நிருபிப்போம், வாருங்கள்.**

**லிம் குவான் எங்**